மல்லிகைத்தீவு அருள்மிகு திருமங்களேஸ்வரர் ஆலய



# ஊஞ்சல் பாடல்

## 19.06.2015

**இயற்றியவர்**

கவிஞர், சோதிடர், சிகண்டிதாசன்

**வெளியீடு**

ஆலய பரிபாலன சபையினரும்

கும்பாபிஷேக விஷேட குழுவினரும்

**நூல் அனுசரனை**

அமரர். சின்னத்தம்பி தெய்வேந்திரம்

நினைவாக அவரது குடும்பத்தினர்

மல்லிகைத்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மல்லிகைத்தீவு
# அருள்மிகு ஸ்ரீ மங்களேஸ்வரி சமேத
# மங்களேஸ்வரர் சுவாமி
# திரு ஊஞ்சல் பாடல்கள்

சீரான திருக்கோணமலை தென்கிழக்கின்
செழிப்பான வயல்நிலம் செல்வங்கள் இருப்பின்
ஊரான மல்லிகைத் தீவூராம் மண்ணில்
உயர்வான அடியார்கள் வாழுமுயர் பதியில்
மாரனை எரித்த சிவன் மங்களேஸ்வரனார்
மணம் செய்த அன்னையார் மங்களேஸ்வரியார்
பேரான அருள்கொண்டு பாடிட ஊஞ்சல்
பெருமைமிகு ஐங்கரன் பாதமலர் காப்பு (01)

வண்ணவெளி வயல்நிலம் வதிவிடமாக
வான்வெளி அதைத்தாங்கும் விட்டமாய் விளங்க
கண்ணான நால்வேதம் கயிறாகத் தாங்க
கனிவான பதிகங்கள் கானமழையாக
விண்ணோரும் மண்ணோரும் வேண்டியருள் நாட
விநாயகனும் வேலவனும் மகிழ்ந்தடியைப் போற்ற
மண்ணிலுயர் மல்லிகைத்தீவினிலே வாழும்
மங்கள ஈஸ்வரரே ஆடீர் ஊஞ்சல் (02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதமான இளந்தென்றல் சாமரம் வீச
இருபுறமும் தீபங்கள் இன்பஒளி ஊட்ட
விதமான அலங்காரம் ஆபரணம் மின்ன
விழிகள்பல வடிவழகை மெய்மறந்து தேட
பதமாகப் பூதகணம் பணிவிடைகள் செய்ய
பக்தர்களும் சித்தர்களும் திருநாமம் ஓத
நிதம் விளங்கும் மல்லிகைத் தீவினிலே வாழும்
மங்கள ஈஸ்வரரே ஆடீர் ஊஞ்சல் (03)

மல்லிகை மலர்வாசம் மனங்களை ஈர்க்க
மா. பலா தேன்கனிகள் மலரடியில் கிடக்க
எல்லையில்லா அழகோடு அருளாட்சி புரிந்து
எங்குமுயர் ஏகாந்தப் பொருளாக இருந்து
தொல்லைவினை தீர்க்குமுயர் தொண்டனாய் வந்து
தொழுவார்கள் துயர்பிணியை துடைத்து அருள்செய்து
வல்லமை சேர் மல்லிகைத் தீவினிலே வாழும்
மங்கள ஈஸ்வரரே ஆடீர் ஊஞ்சல் (04)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசமுள்ள அடியார்கள் நெஞ்சங்களிலமர்ந்து

நிலையான சோதியென காட்சியருள் தந்து

பாசமுடன் பிட்டுக்கு மண்ணையும் சுமந்து

பாண்டியனால் அடிவாங்கி பக்தையைக் காத்து

மாசற்ற மாங்கள ஈஸ்வரியோடிணைந்து

மானிடர்கள் வாழ்வொளிர அற்புதங்கள் செய்து

வாசமுள்ள மல்லிகைத் தீவினிலே வாழும்

மாங்கள ஈஸ்வரரே ஆடீர் ஊஞ்சல் (05)

கங்கை நதி கரைபுரளும் கொட்டியா புரத்தில்

காய்கனி பால் தயிர் தெங்குவளர் நிலத்தில்

தங்கிடும் பறவைகள் தாலாட்டும் இசையில்

தமிழர்கள் வரலாறு தவழ்ந்திடும் ஊரில்

திங்களோடு கங்கையினைச் சிரசினிலே தாங்கி

தட்சண கைலாய நாயகனாய் அமர்ந்து

பங்கமில்லா மல்லிகைத் தீவினிலே வாழும்

மாங்கள ஈஸ்வரரே ஆடீர் ஊஞ்சல் (06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமணித் திருநாட்டில் இருக்கும் ஒரு சொத்தாய்

இலங்குமுயர் திருக்கோணமலை எங்கள் நகரில்

சோழர் குலம் பெருமைகளை சொல்லும் பல கோயில்

சேர்வினில் சேர்ந்ததோர் சிறப்பான தலத்தில்

வாழவழி தெரியாத மானிடரைக் காத்து

வரம் தரும் ஈசனாய் வளமோடு அமர்ந்து

தாழாத மல்லிகைத் தீவினிலே வாழும்

மாங்கள ஈஸ்வரரே ஆடீர் ஊஞ்சல் (07)

பந்தமுள்ள பரந்தாமன் படைக்கின்ற பிரமன்

பரம்பொருள் உனை நாடி வாழ்த்துரைகள் வழங்க

இந்திரனும் சேனைகளும் பணிந்தடியைப் போற்ற

எட்டுத்திசை அதிபர்களும் காவல் பணி செய்ய

நந்தியுடன் வைரவரும் நற்றுணை யிருக்க

நலம் கோடி உந்தனது நல்லருளால் கிடைக்க

வந்தருளும் மல்லிகைத் தீவினிலே வாழும்

மாங்கள ஈஸ்வரரே ஆடீர் ஊஞ்சல் (08)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைக்கு சம்பந்தன் அருட்பாடல் பாட
அம்பிகை உடன் சேர்ந்து அருள் செய்த ஈசா
பன்றிகள் தாயின்றி பசியினால் வாட
பன்றியாய் உருமாறி பாலீந்த நேசா
இன்றைக்கும் எங்களின் இடர்களைத் தீர்த்து
இரங்கி நீ அருள்வாயே கோணமலை வாசா
எங்குமுயர் மல்லிகைத் தீவினிலே வாழும்
மாங்கள ஈஸ்வரரே ஆடீர் ஊஞ்சல் (09)

குளக்கோட்டு மகாராசா அழைத்திங்கு வந்த
குறையாத சிந்துநாட்டு வேளாளர் குடியில்
வளமான கோணேசர் பூசைப் பணிக்காக
மல்லிகைப் பூக்கொண்டு கொடுக்கின்ற பதியில்
இளமை சேர் திருமங்கை அரசியார் தானும்
இன்பமுடன் வழிபட்ட இனிதான தலத்தில்
விளங்கிடும் மல்லிகைத் தீவினிலே வாழும்
மங்கள ஈஸ்வரரே ஆடீர் ஊஞ்சல் (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களோடு கங்கையணி சடைமுடியும் ஆட

திகழ் வண்ண அணிகளுடன் அரவமும் ஆட

தங்க உடல் தாமரைப் பாதங்களும் ஆட

தண்டையணி சிலம்புடுக்கை தாளத்தில் ஆட

அங்க நகை அழகுமிகு இரத்தினங்கள் ஆட

அவனியுடன் உயிர்களும் அண்டங்களும் ஆட

பங்கமில்லா மல்லிகைத் தீவினிலே வாழும்

மாங்கள ஈஸ்வரரே ஆடீர் ஊஞ்சல் (11)

## வாழி

உலகாளும் ஈசனுடன் உமையவளும் வாழி

உயர்வான சைவநெறி தருமங்கள் வாழி

குலவு திருக்கோணமலை தெய்வங்கள் வாழி

குறையாத பணி தொண்டு செய்வோர்கள் வாழி

பலகோடி அடியார்கள் புராணங்கள் வாழி

பாடுவோர் பணிகளுடன் பாரெல்லாம் வாழி

விலகாத மல்லிகைத் தீவூரும் வாழி

விடையேறும் மங்கள ஈஸ்வரரும் வாழி (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரிக்கை

ஆதியந்த மில்லாச் சோதி அரனே எச்சரிக்கை
பாதியுடல் தேவிக்கென ஈந்தாய் எச்சரிக்கை
நீதிநெறி காக்கும் நீல கண்டா எச்சரிக்கை
ஓதியுனைத் தொழுவோர்குறை ஒழிப்பாய் எச்சரிக்கை

எங்கும் நிறை இன்பமிகு ஏகா எச்சரிக்கை
தங்கும் புகழ் கோணமலைத் தலைவா எச்சரிக்கை
கங்கைநதி களனிநிலம் கொடுத்தாய் எச்சரிக்கை
பங்கமின்றி பக்தர்களுக்கருள்வாய் எச்சரிக்கை

மூன்றுவிழி முத்தமிழின் முதல்வா எச்சரிக்கை
தோன்றும் பகை தூசியெனத் துடைப்பாய் எச்சரிக்கை
ஈன்றபெரும் உலகை எமக்கீர்ந்தாய் எச்சரிக்கை
ஆன்றசபை ஆடல் கலை அழகா எச்சரிக்கை

விதியை மாற்றி வினைகள் ஓட்டும் விஸ்வா எச்சரிக்கை
மதியை நல்கி மனதையாளும் தேவா எச்சரிக்கை
கதியாய் கழல் பணிவார் வாழ்வைக் காப்பாய் எச்சரிக்கை
பதியில் உயர் மல்லிகைத் தீவு பரனே எச்சரிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராக்கு

கங்கை நதி வயல் நிலம் கொண்டாய் பராக்கு
கங்கையினைத் தலையினில் முடிந்தாய் பராக்கு
எங்குமுயர் ஏகபொருள் ஆனாய் பராக்கு
எண்ணுவார் இதயத்தை ஆள்வாய் பராக்கு

வேதாந்தப் பொருளாக நின்றாய் பராக்கு
விடையேறி அடியார்க்கு அருள்வாய் பராக்கு
நாதவடிவான திரு நிமலா பராக்கு
நாகத்தை அணியாக ஏற்றாய் பராக்கு

செங்கையில் திரிசூலம் பிடித்தாய் பராக்கு
தேவியுடன் திருநடனம்புரிவாய் பராக்கு
மங்கள ஈஸ்வரனாய் அருள்வாய் பராக்கு
மங்கள ஈஸ்வரியோடமர்ந்தாய் பராக்கு

அருவமும் உருவமும் ஆனாய் பராக்கு
அனைத்துமே ஒன்றென நின்றாய் பராக்கு
மருவும் திருக்கோணமலை நாதா பராக்கு
மல்லிகைத் தீவிலுறை தேவா பராக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாலி

லாலி லாலி லாலி லாலி லாலி
ஆதிமூல ஈஸ்வரரே லாலி லாலி

சோதிவடிவானவரே லாலி லாலி
சுகமனைத்தும் தருபவரே லாலி லாலி
நீதி வடிவானவரே லாலி லாலி
நிர்மலமானவரே லாலி லாலி

காலனை உதைத்தவரே லாலி லாலி
காரணங்கள் அறிந்தவரே லாலி லாலி
ஞாலத்தை காப்பவரே லாலி லாலி
ஞானத்தை கொடுப்பவரே லாலி லாலி

கங்காகர மூர்த்தியே லாலி லாலி
கருணை அன்பில் மேலவரே லாலி லாலி
மங்கள ஈஸ்வரனே லாலி லாலி
மல்லிகைத் தீவோனே லாலி லாலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் - ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

மங்கள ஈஸ்வரர்க்கும் மங்கள ஈஸ்வரிக்கும்
இங்குயர் மூர்த்தியர்க்கும் இணையிலா இறைவியர்க்கும்
(மங்களம்)

ஐங்கரனாம் கணபதிக்கும் அழகு திருக் கந்தனுக்கும்
சங்கெடுத்த அரங்கனுக்கும் சன்மார்க்க பிரமனுக்கும்
(மங்களம்)

அட்டசித்தி அருளுகின்ற ஆதிமூல வைரவர்க்கும்
எட்டுத்திசைக் காவலர்க்கும் எண்ணற்ற ஞானியர்க்கும்
(மங்களம்)

இட்டமுடன் பதிகங்களை இயற்றிய மூர்த்தியர்க்கும்
திட்டமுடன் சேவை செய்யும் தொண்டருக்கும் அடியவர்க்கும்
(மங்களம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம்
கவிஞர், சோதிடர்
வி. சிகண்டிதாசன்
19.06.2015




சுபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Print by: SS Digital's - Trinco 026 2224933

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org